இதில், 8 காண்டங்கள் உள்ளன. பக்க எண்களும், செய்யுள் எண்களும் தனித்தனியே உள்ளன. தலைப்பகுதியும் பிற்பகுதியும் மிகவும் பழுதுபட்டுள்ளன. ஐந்தாவது காண்டத்தில் ஏமதத்துவம் காணப்படுகிறது.

இதில், கல்லுப்பின் பேர், மணத்தக்காளியின் பேர் போன்றவை காணப்படுகின்றன.

★ ★ ★

வரிசை எண் : 2172 சுவடி எண் : 1804

## ரோமரிஷி — 500

ஏடுகள் : 19(31-51 இதில் 33,34 ஆம் ஏடுகள் இல்லை) வரி எண்ணிக்கை : 1200
அளவு : 29 × 4 செ மீ. பக்கத்திற்கு : 14—15 வரிகள் ஆசிரியர் : ரோமரிஷி
பொருள் : மருத்துவம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

........... .......... ......... ...ண்ணு
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பாகங் கேளு
உருதியாய்க் கரிசாலைக் குப்பை மேனி
......கன் செருப்படி யுப்...... லேரும்
அறுதியாம் பொறக்கொண்ணை கரந்தை யோடு
அப்பனே தூதுவளை அவுரி யென்னே !

முடிவு :

பாரப்பா நூறு சொன்னேன் பதினாறு சொன்னேன்
பதிவான அன்பதிலே ரெண்டு சொன்னேன்
சீரப்பா அதில்மவுனம் ஞானஞ் சொன்னேன்
சிறப்பாகக் குருமுறையும் சொல்லி வைத்தேன்
விறப்பா ரோமனென்னும் பேரும் நாட்டி
விசையெல்லாஞ் சொல்லிவைத்தே னிந்த நூலில்
ஆரப்பா அவனியிலே குடுக்கப் போறார்
அப்பனே புசுண்டருட பதந்தான் முற்றே ! — 500

திருச்சித்தம்பலம்

குருவே துணை

நாகப்பட்டணத்தைச் சார்ந்த புத்தூரிலிருக்கும் பெரியநாயக பிள்ளை குமாரன் வயித்தியன் அருணாசலபிள்ளை ரோமரிஷி அஞ்நூறு எழுதி முகிந்தது.

முற்றும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தொடக்கம் 30 ஏடுகளில்லை 303 செய்யுட்களில்லை.

இதில், ஞானம், ருத்திர கற்பம், புத்திபத்தியம், நாதகற்பம், அஷ்டமாசித்தி, உள்க்கரு, வெளிக்கரு, வசியத்துக்குத் தயிலம், அஞ்சனத்துக்குப்பிண்டத் தயிலம், வாடைப் பொடி, கபாலருத்திரன் மந்திரம், மறைப்பு நீக்க, வயிரவபூசை, மாரணத்தயிலம் முதலியன உள்ளன.

எமது சுவடி எண் 454-b/D 1008, எண் 471/D 1061, எண் 538/D 1141, எண் 643/D 1266 ஆகியவைகளில் ரோமழஷி 500 உள்ளது.

எண் : 1413 சுவடி எண் : 1305

## அகத்தியர் மூன்னூற் றிரட்டு

ஏடுகள் : 107 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 17×4 செ.மீ.
பக்கத்திற்கு : 9—12 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

### காப்பு

காலுந் தலையுங் கடந்துநடு வாகிநின்ற
மேலும் துரிய விளக்கமே - காலாம்
வயித்தியமுன் னூறுமே சூத்திரமாய் விளங்கப்
பயித்தி யங்கிணேசன் பார்.

### நூல்

தயாபரமே குணத்தாலே கீழ்முக் கோணம்
சுரையடங்காப் பிறப்பான கடவு ளான
தயாபரமே குண்டலிய ஈய்க் கண்டு தேறி
கனலெழுந்து வாயுவுந்த புரியட்டத்தில்

முடிவு :

கையைப்பார் முகத்தைப்பார் தெசநாடி பார்க்க
கருச்சொன்னேன் பதினயிராத்தில் காணே — 299
காணப்பா பார்த்துணர்ந்த வாதிமக னானால்
கைவண்ணந் ......... ......... .........

காலம் :

ஸ்ரீ ராமசெயம், ஒட்டப்பிடாரந் தாலுக்கா கீழச் செக்காரக் குடியிலிருக்கும் முத்துச் சாமிப் பண்டிதர் மகன் மந்திரம் பண்டிதர் 'அகத்தியர் முன்னூற் றிரட்டு' நன்றாக.

1078 வருடம், மாசி மாதம் 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை துவங்கல்.

இந்தச் சுவடிஎழுதி முடிக்கிறது சந்திக்கல் பெருமாள்பிள்ளை குமாரபிள்ளை நாயகம் பிள்ளை வலக்கு ஸ்கூல் உபாத்தியாயர்.

ஸ்ரீ கோமதி துணை

குறிப்பு :

இதில் கடைசி ஏடு இன்மையால் நிறைவு பெறவில்லை. 299-ஆம் பாடல் குறைபாடுடையதாகக் காணப்படுகிறது.

இதில், அப்பிரகச் சத்து, தாளகநீறு, அண்டசத்து, சயத்துக்குத் தோடை லேகியம், சீந்திச்சக்கரை, கருனாகச் செந்தூரம், அயத்தகடுச் செந்தூரம், துரிசுச் செந்தூரம் அயக்காந்த செந்தூரம், பாண்டுக்கு லேகியம் மற்றும் பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 2474 சுவடி எண் : 1306-a

# குருநாடி சாத்திரம்

ஏடுகள் ; 9 கி. எண்ணிக்கை : 200 அளவு : 18 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 9—10 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

சீர்பெறு முனிவர் வேதந்
    தெளிந்தபின் னுலகத் தோர்கள்
பேர்பெறு கருவி யூற்ற
    பிணிபல துணர்ந்து தேர்ந்து
யூர்பல நாடிக் கெல்லா
    முயர்பெரு நாடி மூன்றில்
சோகுரு நாடி நேர்மை
    செயலுடன் கூற லுற்றாம் — 1

**முடிவு :**

கார்டெருகி வருவதுபோல் வேர்வை தோன்றுங்
    கதிர்த்திடுகி னீர்க்கடுக்குங் கைகா லோயும் — 38

சிலேற்பனத்திற் குருநாடி சிங்கம்

(9–ஆம் ஏடு)

ஏலஞ் சுக்கு அரிதாரம் இனிய நாவி வெண்காரஞ்
சால மூன்று பாஷாணந் தன்னில் தாஷமுஞ் சாதி லிங்கம்
    + + + + +
    தவரா வெதுப்புக் குளிர்க ளுக்கே
    சாற்று மிராம பாணமிதே ! — 2

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், பிணிவரல், ...ரீதம், சன்னி, கப்பம்வகை, நீரிழிவு, குருநாடி முதலான தலைப்புகள் உள்ளன.

இது எமது சுவடி எண் 139-b/D 948 போன்றது.

★ ★ ★

வரிசை எண் : 2475 சுவடி எண் : 1306-b

## தன்வந்திரி நாடிப் பரீட்சை சிந்தாமணி

ஏடுகள் : 22(13-15 ஏடுகள் இல்லை) கி. எண்ணிக்கை : 600 அளவு : 18 × 3 செ.மீ பக்கத்திற்கு : 10—12 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

வேள விநயாகர் விண்ணவர் தன்பத
நாளு மேதுதிப் பார்வினை நாசமா
மூளி னால்வரு கோளு முதித்திடா
வாழ்வி னால்வரு செல்வமும் வைகுவாம் — 1

**முடிவு**

சீரான வன்னியொடு சீத தேவிச்
செயல்பெறவே யென்புதனில் வேவு கொண்டு
பேரான வூனையெல்லா முருக்கிப் பின்னை
பேதமுற்ற கனல்லெ... ............... .........

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், 22-ம் ஏட்டின்பின் ஏட்டெண் 27 குருநாடி என்று எழுதிய வேறு இரண்டு ஏடுகளில் இதன் பாட்டெண் தொடங்குகிறது.

நாடியினைப் பரீட்சை செய்யும் முறை இதில் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 2476 சுவடி எண் : 1307-a

## போகநாயனார் பூசாவிதி

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 350 அளவு : 17 × 3 செ.மீ. பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் ; போக நாயனார் பொருள் : மருத்துவம் நிலைமை ; நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

பாரப்பா வாலைதனைத் தியானம் செய்யப்
பாங்கான நவகோண மிட்டு (?)
சூளப்பா இருவளையும் வாசல் நாலு
சிறப்பாக றீங்கார மிட்டு நன்றாய்

**முடிவு :**

காணப்பா தத்துவத்தைப் பிரித்து நன்றாய்க்
கைமுறையாய்க் காலாங்கி ஆசான் சொன்னார்
ஆணப்பா ஆண்பிள்ளை ஆரென் றாக்கால்
அமுதமுண்டு நிலையில் நின்றால் அவனே சித்தன்
வீணப்பா மற்றதெல்லாம் நாய்வால் பற்றி
வெள்ளத்தைக் கடத்துவோ மெ ற பெற்றி
பூணப்பா இந்தமுறை யாருங் காணார்
புரையுயர்ந்த சூத்திரந்தான் முடிவு முற்றே ! — 44

குருபாதம் துணை

**காலம் :**

விய வருடம் புரட்டாசி மாதம் 3-ம் தேதி சோமவாரமும் திருவோணமும் கூடின சுபதினத்தில் சுவாமியவர்களுக்கு அடியேன் செயங்கொண்டான் பழனிவேலன் போக நயினார் ஞானசூத்திரம் எழுதி முடிஞ்சுது.

முற்றும்

வாலை வடிவேல் துணை

**குறிப்பு :**

இதில், தலைப்பு வேறாகவும் இறுதி வேறாகவும் உள்ளது முன் இரண்டு ஏடுகளில் மருத்துவம் எழுதப்பட்டுள்ளது.

இது, எமது சுவடி எண் 508/D 1106 போகநாயனார் பூசாவிதி 52 போலக் காணப்படுகிறது பாடவேறுபாடுகள் அதிகம் காணப்படுகின்றன.

வரிசை எண் : 2477 சுவடி எண் : 13 7-b

## அகத்தியர் பூசை விதி

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 300 அளவு : 17×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

ஆமப்பா பூசைச் சக்கரத்தைச் சொல்வேன்
ஆருந்தான் சொல்வார்கள் அப்பா கேளு
ஓமப்பா தேவிக்கு ஆதி பீடம்
உத்தமனே னாநாற்பத்தி முக்கோணக்

**முடிவு :**

நாளடா சத்திருத்தி ருத்திரன்
நலமான தேவதையளுஞ் சூழ்ந்து நிற்கும்
சூளடா தேவதைக்கு அர்ச்சினை செய்து
சுகமாகப் போற்றிநன்றாய் பணிந்தி டாயே !

**காலம்**

இல்லை

**குறிப்பு :**

இதில், பிழைகள் மலிந்துள்ளன. பாட்டெண்கள் இல்லை.

இது எமது சுவடிஎண் 238 d/D 511, எண் 352 b/D 696 இவைகளின் வேறாயது போலும்

வரிசை எண் : 2478 சுவடி எண் : 1307-c

## சொன்ன புவனேசுவரி தியானம் - ஞான தியானம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 150 அளவு : 17×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தியானம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

மாயி மாயாரூபி மாதங்கி சடங்கி
அமுர காரேதல்லி சத்தி பாரதி மாதேவி
உச்சிட்டு உச்சிட்டாயா
ஓங்க ஓங்காரி

**முடிவு ;**

மூலமந்திரம் ஞான சத்தி யோகா சத்தி
வாயுசித்தி காய காயசித்தி சகலவசியம்
சகல சத்தியாம்

குருபாதம் துணை

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதுல். வலியக் கிங்கிலியன் தியானம், நாவடக்கி மந்திரம், காடுசுத்தி மந்திரம். உள் மந்திரம், உறக்க மந்திரம், அனுமன் யோகசித்தி, ஞானசித்தி ஞானம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2479 சுவடி எண் : 1307-d

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 25 கி. எண்ணிக்கை : 250 அளவு : 17 × 3 செ.மீ.
பக்கத்திற்கு ; 6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் ; மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

**பலாசுவகைத் தயிலம்**

பலாசுவகைத் தயில மிறக்க
பழகின கலத்தி லிட்டு வைக்கவும்
இந்தத் தயிலம் மூன்று கழஞ்சு
பசுவின் நெய்யில் மூன்று கழஞ்சு
கூட்டிக்கவும்.

முடிவு :

செருப்புத் தொட்டு எதிரே நடந்தேன்
அக்கினியைக் கட்டினேன் ஆங்காட்டினேன்
உத்தமியாளே உமையாளே கட்டினேன்
சுவாகா

சாலம் :

இல்லை

குறிப்பு :

இதில், கற்ப வகை, கல்த்தாமரை, கொங்குள கறப்பன், பொன்மலை பூதகற்பம், நாகதாளி கற்பம், ரசங்கட்ட, கீழ்வாய் நெல்லி கார்போக அரிசிக்கற்பம், பவிந்திரத் துக்கு முதலியன தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 2480 சுவடி எண் : 1307-உ

## அத்துருவம்

ஏடுகள் : 4 கி எண்ணிக்கை : 50 அளவு : 17×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நாடறிய முத்திதரும் ஞான சுகாதீதம்
பாடறிய வெண்பாப் பதினாறும் - நீடுதரு
அற்புதனே நிற்குணனே அத்திமுக வெத்திபுனை
கற்பகமே மெய்ப்பொருளே காப்பு.

முடிவு :

சடங்கற்றோஞ் சாத்தாங் கற்றோஞ் சமாதி
யுடம்பற்றோ மூள்விளையு மற்றோந் - துடம்பெற்றோந்
தில்லையுள் ளேவாழுஞ் சிவனார் திருப்பாத
மெல்லையுள்ளே யானோமி யான். — 15

அத்திவித முற்றும்

**காலம் :**

சருவசித்தி வருஷம் ஆடிமாதம் 27-ந் தேதி சாமியாரவர்களுக்கு சச்சுதானந்த கோவிந்த ராசர்ஞானி யவர்கள் குமாரன் வெங்கிட்ட நாராயணராசா அத்துருவம் எழுதினது,

முற்றும்

சற்குரு பாதமே கெதி

**குறிப்பு :**

இது தத்துவப் பொருளை உணர்த்துவது. இடையில் 4 பாடல்கள் இல்லை. பாட்டில் பதினாறு என்றுளது 15 என்ற எண்ணில் முடிகிறது.

இதன் பின்னர் சௌந்தரிய லகரிப்பாடல்கள் 11 எழுதிய மூன்று ஏடுகளும் மருத்துவம் எழுதிய இரண்டு ஏடுகளும் உள்ளன.

வரிசை எண் : 2481 சுவடி எண் : 1303-a

## ஆதி சாஸ்திரம்

ஏடுகள் : 34 கி. எண்ணிக்கை : 800 அளவு : 20×3 செ மீ
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

திருவளர் கயிலை நாதன்
செய்யபொற் பதங்கள் போற்றி
மருவளர் குழலாள் ஆதி
மாதுமை வணங்கிக் கேட்ப
கருவள ருலகை யீன்ற
காரண பூரண வென்று
ஒருவள மணிதாய் செய்திக்
கொருமொழி புகல வென்றாள்

முடிவு ;

சீதம்போம் கிராணிபோம் திகழ்விளிக்கும்
யினிதாகு மிருமல் தீக்கும்
வாதமுடன் பித்தமுடன் யிரத்தபித்த
மாறாத மலமூலம் வியாதிநீங்கும்
கொங்கையே யெருமை வெண்ணெய்
குன்மம் வாதம் முறித்திடு நல்லிளைப்புடன்
கொழுப்புநீங்கும் வாது வளத்திடுஞ்
சித்தப்பிரமை யோடு கார்குழலே
யிதுமிகவுந் தப்பா தாமே ! — 147

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், வயித்திய லெட்சணம், நாளறிவு, தீனமாரணம், எண்ணெய், வென்னீர் குணம், கனிவகையின் குணம், வெண்ணெ வகை, சோறுவகை விபரம், சுரக்காய் விபரம், பால்வகை விபரம், பூங்கதலிக்கனி முல்லை விபரம், ராமசன்னாசி குரு, இளநீர் குணம் எருமைப்பால் குணம் முதலியன உள்ளன

❋ ❋ ❋

வரிசை எண் : 2482 சுவடி எண் : 1308-b

## நாடிப் பரீட்சை - யறிவு

ஏடுகள் : 16 (35-50) கி. எண்ணிக்கை : 400 அளவு : 20×3 செ.மீ.
பக்கத்திற்கு ; 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : நாடி சாத்திரம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கரிமுக னடியை வாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்கு லத்தில்ப்
பிடித்துட னடவே தொட்டால்

**முடிவு :**

கோதறு மந்த வாசுக்
    கொழுங்கனல் போலே கண்டால்
தீதுற வாண மென்று
    திடம்பட வுரைத்த வாறே ! — 75

நாடிப் பரீச்சை யறிவு

முற்றிற்று

குருபாதார விந்தமே கெதி

வேலுமயிலுந் துணை செய்யவும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது, எமது சுவடி எண் 104-d, 104-i, 322-a போன்றதாகும்.

இதன் பின்னர் 'தத்துவம் உரை' எழுதிய ஏடுகள் 2½ உள்ளன. 96 தத்துவங்கட்கும் இதில் விளக்கம் உள்ளது.

வரிசை எண் : 2483 சுவடி எண் : 1308-c

## சுர நூல்

ஏடுகள் : 1½ (53 54) கி. எண்ணிக்கை : 50 அளவு : 20 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருந்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

**சுரம் 64-க்கும் நாளறிவு**

அசுபதியில் கொண்ட சுரம்
    ஒன்பது நாளில் விடும்
பரணி நாளில் கொண்ட சுரம்
    ஐந்து நாளில் விடும்

முடிவு :

ரேபதியில் சுரந் தோன்றிய
எட்டு நாளில் விடும்
அல்லாது 22, 30 அதுவு
நால் காலம்

சுரநூல் முற்றிற்று

குருவே துணை

ஸ்ரீ ராமஜெயம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இன்னின்ன நட்சத்திரத்தில் சுரம் கண்டால் இத்தனை நாட்களில் நீங்கும் என்பதனை உரைநடையாகக் கூறுகிறது.

வரிசை எண் : 2484 சுவடி எண் : 1308-d

## போதக் கிறிகை

ஏடுகள் : 5½ (55 60) கி. எண்ணிக்கை : 100 அளவு : 20×3 செ மீ
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிவன்கயன் றிருமால் நெஞ்சில்
திருவுளத் துவணி கூர்ந்து
நவபென அகத்தியர்க்கு
நவின்றிடும் ரகசி யத்தை

முடிவு :

பதமிகுபாடல் படித்திடு நிலத்தைப் பாண்டிருந்த
தந்திரம் உரைக்கும்
விதமிகுகிளயாருட நிருந்துண்ண விரும்பி
உற்றிருக்கவும் வேண்டும் — 26

போத கிறுகை முற்றிற்று

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், செய்கிறுகை 18-க்கும் வகை, பச்சைக்கிறுகை, பிச்சுட்பேய் கிறிகை, சிறு கெந்தபக் கிறிகை, பிரமண்டஷதக் கிறிகை, ஆமைக் கிறிகை முதலியன உள்ளன.

இதன் பின்னர், கோளி பற்பம், பாண்டுரோகக் குணம், காந்தலுக்கு நெய், நீர்க் கடுப்புக்கு மருந்து முதலான மருத்துவம் எழுதிய 6 ஏடுகள் உள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 2485 சுவடி எண் : 1308-e

## சிறுபிள்ளைகள் குணமும் மருந்தும்

ஏடுகள் : 6½(67-73) கி. எண்ணிக்கை : 100 அளவு : 20×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிறியவன் வயறு சீறித்
திகைத்திடு மஞ்சில் பார்க்குங்
கறிவுட னுண்ட தாயார்
கைதளிற் தொங்கா தென்றும்

முடிவு :

தேனுக்குக் கலக்க மீளை
　　கடியசுரம் வாதம் போம்
தக்ககண் புண்ணோய் போந்தான் — 26

சிற்றரத்தைக் குணம் முற்றிற்று

ஸ்ரீ ராமசெயம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, பால வாகடம் எனும் சிறுபிள்ளைகள் மருத்துவத்தைக் கூறுகின்றது.

★ ★ ★

வரிசை எண் : 2486 　　　　　சுவடி எண் : 1308-f

## அகத்தியர் சூலை நிதானம்

ஏடுகள் : 21(74-94) 　கி. எண்ணிக்கை : 700 　அளவு : 20×3 செ மீ.
பக்கத்திற்கு : 6—8 வரிகள் 　ஆசிரியர் : அகத்தியர் 　பொருள் : மருத்துவம்
நிலைமை நல்ல நிலை 　முழுமை : முற்றற்றது 　எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியான் வகுத்த னாவல்
　　அருளிச்செய் ஆயுள் வேதத்
தோதிய சூலையீ ரொன்பான்
　　உறுபயர் குணங்கள்
தீதுறு சாத்தி யங்கள்
　　ஆசாத்தியஞ் செய்ம ருந்து
கோதையே யிவைக ளெல்லாங்
　　குறித்துநீ யாய்ந்து கொள்ளே ! — 1

முடிவு :

ஓதிய சார மைந்து
உப்பய்ந்து கார மைந்து
இதுவெல்லாஞ் சமனாய்க் கூட்டி
யிடித்ததில் தூவி வெந்தும்
மாதுபோலப் ........... ...........

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, வயற்றுவலி சம்பந்தப் பட்ட குணங்களும் மருந்துகளும் கூறுகிறது.

வரிசை எண் : 2487 சுவடி எண் : 1309-a

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 100 அளவு : 20 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 3—6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கடவுள் துணை
கருங்வூமத்து வேரை கக்கரவல்லி வேரை
நுணுக்கி சோத்துலே போடவும்
கிருகை வுண்டாகும்

முடிவு :

ஊமத்து விரை வறுத்து பொடி செய்து
நல்ல எண்ணெய் சேர்த்து குடுக்கவும்
கால் கை முடக்கும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் சேங்கொட்டைவல்லாதி முதலியன கூறப்பட்டுள்ளன.

—o—

வரிசை எண் : 2488 சுவடி எண் : 1309-b

## சாலநிகண்டு அடக்க முறை

ஏடுகள் : 38(10-48) கி. எண்ணிக்கை : 800 அளவு : 20×3 செ.மீ
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சாலம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்து எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

உன்னிய பொதிகை வாழும்
ஒருமுனி வருளை யோதி
இன்னில திகண்டு பாடத்
தந்திர சால நூலை

**முடிவு :**

குறிய பொறுகு பீபோவான சண்டையாய்
மாறி வெவுயே அன்றுக்கொன்று தலைமாரிச்
சீரிச் சகின நத்து தீபமாக
ஊரைவிட்டோடி யுலைந்திடு வாரே — 175

வாரமாஞ் சல வியவெரிள

**காலம் :**

(முகப்பேட்டில்)

இஃது மந்திரம் வாசித்துத் தொடங்கியது சாலம் நிகண்டு நன்றாக. 1079 வருஷம் புரட்டாசி மாதம் 26-தேதி எழுதிய ஏடு

**குறிப்பு :**

இதில், ஏடுகள் தலை தடுமற்றம் கடைசிப்பகுதி மிகமிகப் பிழைகள் அதிகம்.

இதில் கத்தரிக்காய்கரு, மத்தங்காய்க்கரு பிரியாவுடைக் கருவகை, வசீகரமோகனம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

இதன் பின்னர் மருத்துவம் எழுதிய 12 உதிரி ஏடுகள் உள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 2489 சுவடி எண் : 1310

## சுர நூல்

ஏடுகள் : 32 கி. எண்ணிக்கை : 1300 அளவு : 18½×3 செ.மீ.
பக்கத்திற்கு : 10—12 வரிகள் ஆசிரியர் : அறியுமாறு இல்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வாதசுரம்

நடுக்கலும் பிதத்தலும் நளிர்ந்து கூசலு
மிடுப்புடன் சந்துகள் நெற்றி நோதலு
மடுத்தடுத் திருமலும் சந்த சோம்பலு
வடித்திரு வாதமாஞ் சுரத்தின் வண்ணம்

முடிவு :

புந்துவிக்கு நாசப்பிணி பாஷப் பத்தா
மோரெழு சீதாங்க மீரேழ் குச்ச
மிந்தவித மாதத்தட்டி பதினேழ் ருத்திர
னிருபதுநா ளீரெட்டுப் புக்கு நேத்திரம் — 15

சந்நி நிதானம் முற்றும்

குருவே துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் த்லைப்பு இல்லை வாத சுரம், பித்தசுரம், வாத பித்தசுரம் சிலேத்தும பித்த

சுரம், அஞ்சனம், வாகடத்திரட்டு வாதத்தின் குணம் மேகவகை, காமாலை, பெரும் பாட்டுக்கு கழங்கு, மேக சஞ்சீவி நெய், சன்னி நிதானம் முதலியன உள்ளன.

இதன் முன்னர் மருத்துவம் எழுதிய 4 உதிரி ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 2490 சுவடி எண் : 1311

## சிசுவாகடம்

ஏடுகள் : 68(111-178) கி.எண்ணிக்கை : 450 அளவு : 11 × 2½ செ.மீ
பக்கத்திற்கு : 2—6 வரிகள் ஆசிரியர் : ரங்கசாமிக்கவுண்டர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

*சிசுவாகடத் திரட்டு*

மாந்தத்திற்கு பச்சிலைச் சாறு நொச்சி
பொடுதலை நுணா உத்தாமணி இதைச்
சமனாக இடித்துச்சாறு பிழிந்து
கொதிக்கவைத்து காலாளாக்கு 3 நாள்
கொடுக்க

**முடிவு :**

ஓம் நமாவென்று செபித்து எடுத்தால்
சித்தி பறுத்தலான சாறு இஞ்சி சாறு
வெந்நீர் தேன் இதுகளிலிட சகலமாந்த
சகலதோஷம் தீரும்

தாயும் பிள்ளைக்கி பத்தியம்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது, தனியார் சுவடிபோலும். குழந்தைகளுக்கான எளிய நல்ல மருந்துகள் உள்ளன அமுர்தாதிக்குளிகை, எரிகணத் தெண்ணெய், பேதி பூபதி மாத்திரை, பால சஞ்சீவி

மாத்திரை, பொறுமல் மாந்தகணத்துக்கு, குழந்தைகளுக்குச் சகலதோஷத்துக்கும் 'சிவ குளிகை' முதலான பல அறிய மருந்துகள் உள்ளன.

இது, ''பாலவாகடம்'' என்றும் "பிள்ளைப் பிணிவாகம்" என்றும் பெயர் பெறும்.

—00—

வரிசை எண் : 2491 சுவடி எண் : 1312-அ

## (அகத்தீசர்) கர்ம சூத்திரம் — 36

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 400 அளவு : 13½ × 3½ செ.மீ.
பக்கத்திற்கு : 7—9 வரிகள் ஆசிரியர் : (அகத்தியர்) பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் ;

ஆதியந்தங் கடந்துநின்ற அகுதி காப்பு
அப்பிரத்தே நின்றபரா பரமே காப்பு
சோதியந்தத் துள்ளிலங்குஞ் சுடரே காப்பு
சோதசருப நிறாமயமென சுளியே காப்பு
நீதியெங்கு மாய்நிறைத்த பராபரையே காப்பு
நிராமய மெய்ஞ்ஞான மனோ.எமணியே காப்பு
ஓதியந்த வேதமுடி நீங்கா ரத்தில்
ஓமென்வே நின்றகுரு கிணேசன் காப்பே! — 1

முடிவு ;

கருதினேன் பதினெண்பேர் பாடல் தேர்ந்து
கற்மவினை தாகைன்று கன்று கடாட்சகிண்டாம
கருதினேன் தனுமையாள் சொல்லக் கேட்டு
கைலாசச் சுவர்க்கம் வரை பெருக வேண்டி
கருதினே னுலகத்தில் நல்லோர்க் ............ ...........
.........மிகளு மிதையறிந்து செய்ய வேதான்
கருதினோ மாதிபரா பரத்தை நோக்கி
கற்மசூத்திரம் முப்பத்தாறு முற்றே ! — 36

காலம் :

இல்லை

குறிப்பு ;

தலைப்பு முறிந்துள்ளதால் அறியக் கூடவில்லை இது சுவடி எண் 497/D 1092 ன் வேறாயது.

* * *

வரிசை எண் : 2492 சுவடி எண : 1312-b

## அகத்தியர் கற்ம சூத்திரம்—16

ஏடுகள் : 8 (20—27) கி. எண்ணிக்கை : 200 அளவு : $13\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

சீரான கற்ம்மத்தின் ......... ...களும்
செப்புகிறேன் நா...... ணக்கு மாகும்
பேறான அவனுடைய நாமமா பத்து
பிரபலமா நட்சேத்திர பட்சி பார்த்து
நேரான வாரமது பட்சி பார்த்து
நேமமுட னஞ்செழுத்தின் பட்சி கண்டு
காரான கணபதியைத் தியானஞ் செய்து
கற்மமென்ற நவக்கிரகம் பூசை செய்யே !

**முடிவு :**

முத்தான கற்மமெல்லாம் பதினாறில் சொன்னேன்
முன்கற்ம காண்டத்தை முனிந்து பாரு
சித்தான கற்மசூத்திரம் ஞூற்றைம்பதையும் பாரு
சிறப்பான கற்மசூத்திர முப்பத்தாறும் பாரு
முத்தான கற்மமெல்லாஞ் சுருக்கிச் சொன்னேன்
உத்தமற்குப் பதினாறில் கற்ம சூட்சம்
பெற்றுநூலும் பேறுபெற்று வாழ்ந்தி ருந்த
பெருநூலைச் சுருக்கிபதி னாறு முற்றே ! — 17
அகத்தீசர் துணை

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், பஞ்சபட்சி நலம்பார்த்தல், நவக்கிரகப் போற்றல். மேலும் தீட்சையின் அங்கங்களாகிய நியாசம் ,அங்கநியாசம் பிராணாயாமம் முதலானவை பேசப்பட்டுள்ளன.



★ ★ ★

வரிசை எண் : 2493

சுவடி எண் : 1312-c

## அகத்தியர் அருளிச் செய்த சகலவியாதிக்கும் முப்பாவை களிப்பு — பத்து

ஏடுகள் : 5(28-32) கி. எண்ணிக்கை : 100 அளவு : $13\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

ஆதியந்த ......... .........ஞ் சொல்ல
அம்மையவள் தானுரைத்தாள் ஆனதாலே
சாதியெனக் குலத்தோர்க்குக் களிப்பே செய்யச்
சார்வாக யிந்தமுறை யாருஞ் சொல்லார்

**முடிவு :**

ஆட்டியே முப்பாவை பதிலாச் சேறு
அப்படியே அஷ்டகற்மம் நூறிலப்பா
கூட்டியே வாடைபதி னாறில் சொன்னோம்
கொடியதொரு முப்பாவை களிப்பு முற்றே !

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் உள்தலைப்புகள் இல்லை. எல்லா நோய்களும் தீர மருந்துமுறை கூறப் பட்டுளது

வரிசை எண் : 2494

சுவடி எண் : 1312-d

## அகத்தியர் களிப்பு நூல் — 50

ஏடுகள் : 2(33-34) கி. எண்ணிக்கை : 30 அளவு : $13\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ.
பக்கத்திற்கு : 9—10 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் இரண்டு செய்யுட்கள் முழுமையாயும் ஒரு செய்யுள் குறையுடனும் உள்ளது. பின்னர் யந்திரம் எழுதிய ஏடு ஒன்றும், இரசகற்பூரக் குளிகை, வாலை சஞ்சீவிக் குளிகை, சன்னிக்கு கலிக்கம், சுரக்குளிகை, வசீகரம், வீரியபுஷ்டி, தேவாங்குப் பிரயோகம், வினோதவித்தை, பூலங்கொம்பு வினோதம், தும்பி வினோதம் முதலியன எழுதிய 13 ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 2195 சுவடி எண் : 1313

## குணவாகடம்

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 100 அளவு : 15×2½ செ.மீ.
பக்கத்திற்கு 14வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

**ஹரிஓம் நன்றாக**

**குருவாழ்க குருவே துணை**

ஆனைமுகம் ஆறுமுகம் அப்பிகை பொன்னம்பலம்
வானஞான குருவாணி பாதம் நாடு
பரமசுந்தரி கவுரிதந்தருள் பழனியங்கிரி
முருகரே துணை
செந்தில் வேலவன் சேவடி போற்றினால்
வந்திடும் வினைதீர்க்க மந்திர வடிவேல் வருமே
போத்தம் பாளையம் ரா ரங்கசாமிக்கவுண்டன் ஏடு

**வியாதிகளின் வரலாறும்**
**குணமும்**

திரைகட லுலகி லுள்ள
திரண்டநூல் யாவும் பார்த்து
வகையொறு பிணியின் கோர்வை
வகுப்படி நாராய்ந்து

முடிவு :

மாமிசத்தைப் பற்றிய சுரகுணம்

அதிகமாய் சுரமடிக்கும்
சுவாசங்காணும்

காலம் :

1939 வருஷம் தண்டபாணீ தேசிகர் துணை. கலியுகாதி 5041-ல் பிரமாதி வருஷம் புரட்டாசி மாதம் 9-ந் தேதி திங்கட்கிழமையன்று இது எழுதியது.

போத்தம் பாளையம் நாமக்கவுண்டன் மகன் ரங்கசாமிக்கவுண்டன் ஏடு.

சிவய நமா

குறிப்பு :

இதில், பீனிசவகை 8-க்கும் குணம், காச்சலின் விபரம், சிலேத்தும சுரக்குணம், வாதசிலேத்தும சுரம் சன்னிவாத சுரகுணம், உட்சுரக்குணம், மந்தசுரகுணம் முதலான தலைப்புகள் காணப்படுகின்றன.

★ ★ ★

வரிசை எண் : 2496 சுவடி எண் : 1314-a

## தேரையர் வைத்தியம் — 100

ஏடுகள் : 42 கி. எண்ணிக்கை : 700 அளவு : 16½×3 செ.மீ. பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : தேரையர் பொருள் : மருத்துவம் & சோதிடம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிறப்புப் பாயிரம், ஸ்துதி, கலிவிருத்தம்

திருவிநாயகன் றென்கை லாசத்தில்
அறுமையா யெனக்கன் றுரைத்தபடி
வருமையில்லா வைத்திய நூர் சொல்லக்
குருமுனி பாதங்கொண்டு துதிசெய்வாம்

குருமுனி - அகத்தியர்

முடிவு :

மந்தன் – சனிக்கிழமை

வசமதாய யிந்தநூ நூறும்
    வாகுடன் பார்த்த பேர்கள்
நிசமுள்ள வைத்திய னாவார்
    நெடும்டவி யுள்ளோ ரெல்லாம்
திசைமுக னருளால் சொன்ன
    தேரையன் மருந்து கொண்டோர்
புசபல மிகவுண் டாகி
    புவிதனில் வாழ்வார் (தாமே)! — 100

திசைமுகன் – பிரமன்

முற்றிற்று

தேரையர்......... வைத்தியம் — 100

முற்றும்

காலம் :

(முகப்பில்)

கலியுகாதி 5046-ல் பாற்திப வருஷம் வைகாசி மாதம் 11-ம் தேதி வியாழக்கிழமை எழுதி முடிந்தது.

இது எழுதியது ராமக்கவுண்டன் மகன் ரங்கசாமிக் கவுண்டன் போத்தம் பாளையம். இதை யார் எடுத்தாலும் டி யாரிடம் கொடுக்க வேண்டியது. இல்லாவிடில் தோசம் வரும்.

குருவே துணை

குறிப்பு :

நடுப்பகுதி எலிகடித்துள்ளது போல் உளது.

இதில் நூற்பயன், வாத பித்த சிலேத்தும சுரங்களின் தொகுப்பு, அறுபத்தினாலு சுரத்துக்கும் பூபதிக் குளிகை, சுர விரோசனம் வாய்வு 80 க்கும் கிறுமி விழ மருந்து, மாந்த சவலைக்கி, பாம்புகடி தீர மருந்து. பெரும்பாட்டுக்கு, ஆண்பிந்து தம்பனம், நரம்பு சிலந்திக்கு மருந்து வசிய மை முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசைஎண் : 2497 சுவடி எண் : 1314 -b

## வைத்தியத்திரட்டு

ஏடுகள் : 70(43-112) கி. எண்ணிக்கை : 1300 அளவு : $16\frac{1}{2} \times 3$ செ மீ.
பக்கத்திற்கு : 6 - 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

ஒறுத்தலை வலிக்கு

சமுத்திரப்பளம் பெறுங்காயம்
சமனிடையாய் பொடித்துப்
பொட்டணங்கட்டி முலைப்பாலில்
துவைத்து நாசியில் நிறக்க நசியமிட
2,3, வேளை தீரும்

**முடிவு :**

அசுவகெந்திவேர் இந்துப்பு கடுக்காய்
இவைகள் 8 ரூபாயிடை சகலவியாதிக்கு
மெழுகுபதம்

**காலம் :**

93-ஆம் ஏட்டின் பின்புறம்.

நந்தன வருஷம் பங்குனி மாதம் 19-ம் தேதி எழுதி முடிந்தது இந்த ஏட்டை ஆர் எடுத்தாலும் உடையார் வசம் கொடுக்கவும். கொடாவிடில் பெரும் பாவம் ஏற்படும். ரங்கசாமிக் கவுண்டன் பொத்தம் பாளையம் ஷயார் ஏடு.

**குறிப்பு :**

இதில், பஞ்சதீபாக்கினி லேகியம், மன்மத சிந்தாமணி லேகியம், கசாயவகை, சன்னிஎண்ணெய், தாம்பிர குளிகை, சிறுபிள்ளைகள் பெறுக்கநெய், அசுவாதி சூரணம் பெரும்பாட்டுக்கு லேகியம் மாணிக்க கிறுதம், யூனானி செந்தூரம் கபால வாதத்துக்கு, மற்றும் பல தலைப்புகள் உள்ளன. நல்ல மருந்துகள் கூறப்பட்டுள்ளன. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 2498 சுவடி எண் ; 1315-a

# புலிப்பாணி வைத்தியம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 180 அளவு : 20×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : புலிப்பாணி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

**பார்வைக்காக மருந்து**

தானேதான் யின்னமொன்று சொல்லக் கேளு
தயவாளு காட்டுடைய சீரகத்தினுட இலையைத் தானே
வானேதான் கசக்கியதை தடவும் போது
வளமான வொழபில்லி யெரிவு வீக்கம்
கோனேதான் மேலேரின் ஊது பில்லி
குணமாகும் பார்வைமுதல் திஷ்டி தீரும்
ஆனேதான் போகருட கிடாட்சத் தாலே
அன்பாகச் சொல்லி வைத்தேன் புலிப்பாணி யாமே !

**முடிவு :**

ஆச்சப்பா கழுதைப்பால் துட்டிடைதான் ரெண்டு
அடவான யிஞ்சிச்சார் துட்டிடைதான் விட்டு
பாச்சப்பா சக்கரைதான் துட்டிடைதான் போட்டு
பாங்காக பற்பமது களஞ்சி போட்டு
யேச்சப்பா குடுத்துவிடு யிருவேளை யெழுந்த
பித்தம் பயித்தியமும் பிறமை யேவல்
போச்சப்பர தேவதைகள் யிடும்பூத பில்லி
ஏவப்புமுதல் தீருந் தானே ! — 14

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், சுவடியில் தலைப்பு இல்லை. முதற்பாட்டு கொண்டு தலைப்பிடப்பட்டது.

இதில் சூனியங்களுக்கு புகை, சாந்தி விபரம் வியாதிக்கு, நல்லயுத்தி, சூனியங்கள் தீர்க்க எண்ணெய், மூலத்துக்கு மருந்து, பயித்தியத்துக்கு, யேவல் பயித்தியம் முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 2499 சுவடி எண் : 1315-b

## கருவூரார் பாடல்

ஏடுகள் ; 10(9-18) கி. எண்ணிக்கை : 300 அளவு : 20×3 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : கருவூரார் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

உரைக்கிறேன் மறைப்பதனை சித்திரமாக
உலகத்தோர் பிழைப்பதற்கு கருவை யெல்லா
தெரைக்குறேன் சிவஞானந் தங்கித் தானால்
சித்திமுத்தி ரெண்டுமுண்டாட பாறு பாறு

**முடிவு :**

பூவனா மாட்டவகை யோகி யாக
அப்பனே சினக்கியானந் தங்கித் தானால்
தேவனாங் கருவெல்லா மொளிக்க யில்லைத்
தியானிப்பார் வாலைதனைச் சொல்வான் பாரே ! — 27

வாலையம்மாள் துணை செய்யவும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது, எமது சுவடி எண் 434-d/D 965 'கருவூரார் சூத்திரம்' போன்றது.

* * *

வரிசை எண் : 2500 சுவடி எண் : 1315-c

## புலிப்பாணியார் பாடல்

ஏடுகள் : 1½ (19-20) கி. எண்ணிக்கை : 50 அளவு : 20×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : புலிப்பாணியார் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஓதமடா யின்னமொரு கருவைக் கேளு
ஒளிவாகக் கருநாழி பச்சை நாவி
வாதமடா யூர்தனிலே காத்து வாக்கில்
வளமான எருவடிக்கிப் பத்து போடு

முடிவு :

வருந்தியதன் விபூதிதன்னை மேலே போடு
வருகுமடா ஆவேசம் மகிழ்ந்து கேளு
பொருந்தியவள் மருதினத்தில் மருந்து வேண்டாம்
போகுமடா ஆடியது புதுமை தானே! — 4

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பேய் பிசாசு பிடித்தவர்களைக் குணப்படுத்தும் வகை கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 2501 சுவடி எண் : 1315 d

## கொங்கணர் கற்ப முறை — பத்து

ஏடுகள் : 3½ (20-23) கி. எண்ணிக்கை 100 அளவு : 20× செ மீ.
பக்கத்திற்கு : 4—8 வரிகள் ஆசிரியர் : கொங்கணர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முத்திகொண்ட வேதாந்த நந்தி யீசன்
மூலாதா ரத்திருந்த கிணேசன் பாதம்
புத்திகொண்ட சித்தாந்தம் நாதாந் தத்துள்
பாவியே விந்துவுறும் போக நாதர்

முடிவு :

தேனான் மனமொருமை யான் தாலே
தேவியங்கே சுழினையிலே ஒளிபோலே நின்றார்கள்

மானான பெண்மயக்கம் மாண்டு தானால்
வாச்சுதடா கற்பத்தின் வரிசை கேளே ! — 10

வாலையம்மாள் துணை செய்யவும்

ஓம் சிவமயம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், நாற்பத்து முக்கோணத்துக்கும் அட்சர விபரம் முதலியன கூறப்பட்டுள்ளன.

பின் ஏட்டில் : ஓம்

மெய்யினில் வெண்ணீருடன் காதினில் குண்டல வெளி முகமும்
செய்யமெய்ஞ் ஞானிகள் வந்து வணங்கு ளின்றிருவடிக்கே
கய்யினில் சலம் பாசக் கயறு கருநாய் பிடிக்க
வய்யக மதிகம் வருவாய் சொற்ன்ன வயிரவனே !
என்ற பாடல் ஒன்றுளது.

★ ★ ★

வரிசை எண் : 2502 சுவடி எண் : 1315-c

## அகத்தியர் — 9

ஏடுகள் : $3\frac{1}{2}$(24-27) கி. எண்ணிக்கை : 100 அளவு : 20×3 செ.மீ
பக்கத்திற்கு : 4—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பூரணமாய் நின்றசுழி முனையே காப்பு
பொதிகைமுனிக் கருள்கொடுத்தோன் பாதங்காப்பு
வாரணிந்த முலையாள்தன் பாதங்காப்பு
மகாகோடி முனிவர்சித்தர் பாதங் காப்பு
தாரணிந்த கரிமுகவன் பாதங் காப்பு
தப்பாமல் சொல்லுகிறேன் மகாலிங் கய்யா
பேரணிபோல் முழங்கிவரும் ஒன்ப துக்குள்
பெருநூலுங் குருநூலுங் காப்புத் தானே — 1

முடிவு :

மேல்ப்பாரும் பிழைக்கவல்லோ யிதனைச் சொன்னேன்
இதைப்பழித்தா லிடிவிழுகும் பெருவயறு மாவான்
பொல்லாத நோய்கள்வரும் புழுத்துச் சாவார்
புலையனைப்போ லென்னாளும் திரிவான் மட்டை
நல்லமிங்கி லிதுவென்று பார்த்_ா யானால்
றாயனைப்போ லேயிருந்து நன்மை சேர்வார்
சொல்லாத வித்தையெல்லா மிதுவே சொன்னோ
சூட்சமடா ஒன்பதுக்குள் ளுணுக்க முற்றே ! — 10

திருச்சிற்றம்பலம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், கற்பத்தின் வகை, மருந்து முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2503 சுவடி எண் : 1315-I

## அகத்தியர் — 8

ஏடுகள் : 2(27-29) கி எண்ணிக்கை : 100 அளவு : 20×3 செ மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சிவவ்வசி வங்அங்நங் கென்று திரும்பவே
அங்கிலியு மங்கென்றோது சரிதையோடு
கிறுகையது ஞானமப்பா தப்பாதே ஓங்கிலியும்
உவ்வென்றோதும் பரிகமுடன் பூரணத்தி லியங்கும்

முடிவு :

வறியார்க ளிதுமுன்றுஞ் செத்தோர் சித்தன்
வளியறியார் மூடரென்ற கழுதை மாடு
ஒளியாகுஞ் சோதிமணி யிதுவே யாற்கு
முயர்வைத்த நாகமணிக் கிரீடந் தானே — 8

திருச்சிற்றம்பலம்

சகலம் :

இல்லை

குறிப்பு :

இதில் மந்திரங்கள், மருத்துவத்துடன் கூறப்பட்டுள்ளன.

இது எமது சுவடி எண் 248-g/D 438, எண் 347-m/D 688, எண் 514/D 1114-ன் வேறாயது.

வரிசை எண் : 2504 சுவடி எண் : 1315-g

## சுந்தரானந்தர் ஞானம்

ஏடுகள் : 9½ (30-39) கி. எண்ணிக்கை : 300 அளவு : 20 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சுந்தரானந்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூரணமு மாதராம் புலனுஞ் சூட்சம்
பொறியறிந்து சுழியில் நின்ற அய்யர் பாதம்
காரணமாய்ப் போற்றி செய்து அசைவை நீக்குக்
கண்ணொளியால் விண்ணொளியைக் காண வேண்டி

முடிவு :

மானென்ற ததின்மேலே ருத்திர லோகம்
மைந்தனே வட்டமிட்டு நடுவைங் கோணந்
தானென்ற ததினடுவே முக்கோண மப்பா
தருவாக யிதினடுவே சிங்கென் றூனே ! — 29

சற்குருபாதந் துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

தத்துவங்கள், மந்திரங்கள், அட்சரங்கள் இதில் பேசப்படுகின்றன.

இதன்பின்னர், அயபற்பம், காந்தபற்பம், வெள்ளியபற்பம் காரிய பற்பம், கல்னார் பற்பம், விஞ்சை அறுகோணவிபரம், சன்னிக்கு முதலான தலைப்புகளைக் கொண்ட 7 ஏடுகள் சக்கரங் களுடன் காணப்படுகின்றன.

★ ★ ★

வரிசை எண் : 2505 சுவடி எண் : 1316

## மாட்டு வாகடம்

ஏடுகள் : 51 கி. எண்ணிக்கை : 800 அளவு : 20×3 செ மீ.
பக்கத்திற்கு : 5—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரிஓம் நன்றாக குருவாழ்க

குருவே துணை

ஐந்து கரத்தனை ........... போற்றுகின்றோமே !
கந்த வேளைக் கடவுளை நந்தவா
முந்தவேளை யெரித்த முழுமுதல் - எந்தவேளையி
லெப்படி யாகுமோ அந்த வேளையி
லப்படி யாகுமே.

மாட்டுவாகடம்

புண்ணுக்கு எண்ணெய்

சூரியனுதையத்தில் எரும்பெடுத்த மண்ணை
மூன்றுதிரம் வலமாய்வந்து வாய்பேசாமல்
ஒருபிடி மண், பொரும்பியிலை நாலஞ்சு
மெண்ணு, மாட்டை மூணுதிரம் வலமாய் வந்து

முடிவு :

தவளை நோயின் குணம்

நாலுகாலும் வீங்கும் குளம்பு நீளும்
கணைக் காலுக்கும் கீழே நாலுகாலுக்கும்

கீழே தவளைச் சூடு போடவும்
சூடு 0000 இப்படிப் போடவும்

குருவேதுணை

ஓம் சரவண பவ

ஓம கணேசாய நம

மாட்டுப்பண்டிதம் முற்றிற்று

**காலம் :**

இல்லை

குறிப்பு :

இதில், ஆனைக்கருவைக் கொண்ட மாடு, எருமை, முண்டிகைச் சிலைகொண்ட மாடு, முகச்சிலை கொண்ட யாட்டின் குணம் பக்கச்சிலை கொண்ட பசுவுக்கும் எருமைக்கும் நெஞ்சு சூலை கொண்ட மாட்டுக்கும் எருமைக்கும், பிச்சுதோசம் கொண்ட பசு எருமைக்கு, ஊது நோவு கொண்ட பசு எருமை, நல்ல பாம்பு கடித்தால் சுட்டுநாளி கொண்ட பசு எருமை, மாடு கண்ணுப் பார்க்க, கைமுலை கரக்க மருந்து, விஷம் தீண்டின குணம், அடைப்பானுக்கு மருந்து, முதலான பல தலைப்புகள், சூட்டு அடையாளம் முதலியன கூறப்பட்டுள்ளன.

**வரிசை எண் : 2506** **சுவடி எண் : 1317-a**

## இருளப்பன் மந்திரம்

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 100 அளவு : 20 × 2½ செ.மீ
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாந்திரீகம்
நிலைமை ; பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

அரிஓம் நமசிவ்ராய அரிஓம் லிங்கா நம
சிவாய அரிஓம் சிவா நம சிவாய
அரிஓம் சிவலிங்கா நமசிவாய

முடிவு :

அய்யராணை போச்சு குருவாணை போச்சு
குருவாசாரியாராணை போச்சு
என்னையும் உன்னையும் வகுத்த பரமேசுயரறாணை
பூந்திறங்கிப்போ

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தேளுக்கு, தலைவலிக்கு, எழுநாயறுக்கு, சருவவீக்கத்துக்கு திட்டி, ஏறுவை பில்லி, சூனியம் வஞ்சினை, ஒடி கொப்பளத்துக்கு மந்திரம், பிள்ளைப் பிணி நூற்றெட்டுக்கு வீசவுப் முதலான மந்திரங்கள் உள்ளன.

★ ★ ★ ★

வரிசை எண் : 2507 சுவடி எண் 13 7-b

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை : 500 அளவு : 19×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

இச்சிப்பட்டை ஆவாரம்பட்டை
தாளைவிழுது நெல்லிவத்தல்
கத்தாளைவேர் வேப்பவேர்
விலாம்பிச்சம்வேர் இதுவகை
யொன்றுக்குப் பலம் ரெண்டு கூட்டி

முடிவு :

தயிர் வெள்ளாட்டு உப்புக்கண்டங்
கூட்டவும், நாலு நாளைக் கொருக்கால்
முழுகவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், புண்ணுக்கு எண்ணெய், அரையாப்புக்கு எண்ணெய், நட்சேத்திரத்தில் மகா திசை பெரும்பாட்டுக்கு நெய், உதிரம் நிற்க முதலான பல மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2508 சுவடி எண் : 1318

## மாட்டு வாகடம்

ஏடுகள் : 61 (1, 2, ஏடுகள் இல்லை) கி.எண்ணிக்கை: 800 அளவு : 19 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 5 – 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சொக்குக்கு மந்திரம்

நந்தியீசன் நடுவழி சென்று
ஊந்திப் பசியால் பூவைத்தின்று
தொந்தி குலுங்க சொக்கிக் கிடக்கிறாள்
அந்த மனுஷன் வாங்கி நீர்குடிக்க
எந்த யாளும் ஈசுப்ர னாணை

முடிவு :

வாலுவரைக்குந் தடியில் நீவ்
சகல பிணியும் சொக்கு முதலானதும்
நீங்கு மிப்படிச் செய்யவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பசு எருமை மாடுகளுக்கும் நோய், முதலினதுகளுக்கு மருந்து மாந்திரீகம். முதலானவைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2509 சுவடி எண் : 1319.

# வைத்தியக் கோர்வை

ஏடுகள் : 259 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 24×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை.
ஆனைமுகம் ஆறுமுகம் அமபிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் — நாடு

கைமுறை பாக்கெட் வைத்தியம்

ஆதியெனும் பராபரமே சின்மயமே போற்றி
அண்ட ரண்ட நிறைந்தநிற் குணமே போற்றி
\+ \+ \+ \+ \+
கோனனைய குருமுனிகள் பாதம் போற்றிக்
கூறுகிறேன் வயித்தியத்தின் கோர்வை தானே !

**முடிவு**

குங்குமப்பூ விராக. 2. கோறோசனை விராகன் 3.
முலைப்பாலிலாட்டி குன்றியிடை குளிகை அனுபானங்களிலிட
சகல சந்நிசுரம் வாந்தி நீங்கும். கடின பத்தியம்

சிவமயம்

**காலம் :**

கலியுகாதி 5040 யிதன்மேல் செல்லாநின்ற வெகுதானிய வருஷம் புரட்டாசி மாதம் 13-ந் தேதி வியாழக்கிழமை சித்தயோக தினத்தில் இந்த கைமுறையை பழைய பிரதியிலிருந்து புதுப்பிக்கப்பட்டது.

இது பூராவும் எழுதியவர் அவனாசி தாலுக்கா கஸ்பா போத்தம் பாளையத்திலிருக்கும் ராமக் கவுண்டன் மகன் ரங்கசாமிக் கவுண்டன் ஏடு. எடுத்தவர் பார்த்துவிட்டு உடையார் வசம் கொடுக்கவும். இல்லாவிட்டால் பாவம்.

சிவமயம்

இதன் பின்னர் அட்டவணை எழுதிய ஏடொன்றுளது.

குறிப்பு :

இது, வைத்தியத் திரட்டு ஆகும். இதில் கண் நோவுக்கு, காதில் சீழ் வடிதலுக்கு மருந்து, கண் இமை தடிப்பு, கரிப்பு, பேதி வகைகள் மற்றும் பல விதமான நோய்களுக்கும் மருந்துகள் ஏராளமாகக் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2510 சுவடி எண் : 1320

## செய்முறை பாக்கெட் வைத்தியம் நாடி பரிச்சிக்கும் விதம் முதலியன

ஏடுகள் : 140 கி. எண்ணிக்கை : 2500 அளவு $24\frac{1}{2} \times 3$ செ.மீ
பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம், சோதிடம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

செய்முறை பாக்கெட் வைத்தியம்
பதினெண்மர் துதி

கற்றாலு ஞானக் கருத்தறிந்தோர்கள் கமலபதம்
பெற்றாலுஞ் சித்தி பேரின்ப கல்வி-பிறவாமுத்தி
வைத்தாலும் வெற்றி மறுவியவர் பதம்
வணங்கவும் யான் சித்தாதி சித்தர் பதினெண்மர்
தந்த திரவியமே

நாடி பரிச்சிக்கும் வீதம்

கையைப் பிடித்து நெட்டை வாங்கி
பெறுவிரல் பக்கமகா விறுக்கும்

முக்கிய குறிப்பு

வைத்தியர் வியாதியஸ்தனுக்கு
மருந்து கொடுக்குமுன் அவர்
வயதையும் தொழிலையும் நோய்உண்டாகிய
காலத்தையும்

முடிவு :

பால வாயுவு கண்ட சூலை, அண்டவாய்வு, கன்னப்புற்று மகோதரம், விக்கல் அதிசாரம் இதுகள் யாவுந் தீரும். நாடி வலுக்கும் தாது புஷ்டியுண்டாம், பத்திய மில்லை பழையதாகாது.

சிவமயம்

காலம் :

(முதல் ஏட்டில்)

கலியுகாதி 501 யிதன்மேல் பார்த்திப வருஷம் வைகாசி மாதம் 17-ந் தேதி புதன்கிழமை எழுதியது போத்தம் பாளையம் ராமக்கவுண்டன் மகன் வைத்தியம் ரங்கசாமிக் கவுண்டன் செய்முறை பாக்கெட்டு வைத்திய ஏடு. இதை யார் எடுத்தாலும் ஷயாரிடம் கொடுக்கவும் இல்லாவிடில் சிசுகத்தி தோசம் அடைவார்கள்.

குறிப்பு :

இதில். ஸ்திரி புருஷர்க்கு நாடி பார்க்கும் விதம், பித்தத்தின் குணம், சிலேத்து மத்தின் குணம் பூபதிக்குளிகை பச்சைக் கற்பூரக் குளிகை, மலபந்தத்துக்கு முத்து லேகியம், வில்வாதி தைலம் முதலான வைத்தியங்கள் எளிய முறையில் கூறப் பட்டுள்ளன 140-ஆம் ஏட்டிலும் மருந்து கூறப்பட்டுள்ளது. அட்டவணை, படலங்களின் பெயர், பக்க நம்பர் துடர்ச்சி நம்பர் முதலானது எழுதிய ஏடொன்றுளது,

வரிசை எண் : 2511 சுவடி எண் : 1321-a

## அகத்தியர் வைத்திய சாத்திரம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 80 அளவு : 24×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 580-d/D 1198 போன்றது.

வரிசை எண் : 2512

சுவடி எண் 1321-b

## மந்திர சாத்திரம்

ஏடுகள் : 72 கி. எண்ணிக்கை 1400 அளவு : 24 × 3 செ மீ.
பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாந்தீரீகம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

வராகி தோத்திரம்

ஓம் துர்கா பகவதி சுந்தரி மாயி
நற்காமேஸ்வரி நாரணிசூலி
மாதங்கி சடங்கி மத்த மாதங்கி
ஒதுங்காதசூலி ஓன்மத்த பயிரவி

**முடிவு :**

—.......பெண்ணையில் கலக்கி அடுப்பு ஏத்தி
மொளுகு பதந்தில் இரக்கவும்
தீரும்வியாதி காசி இருமல் எல்லாம் தீரும்
ஒருநாள் விட்டு ஒருநாள் முழுகவும் தீரும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் பலவிதமான மந்திர யந்திரங்கள் காணப்படுகின்றன.

★ ★ ★

வரிசை எண் : 2513

சுவடி எண் : 1322-a

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 50 அளவு : 24 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கடவுள் துணை
பாலையானந்த சுவாமிகள்

அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்
முச்சுட ராகி யொன்றாய்

முடிந்ததோர் சோதி பாதம்
அச்சுத னயனுங் காணா
அகண்டமா யளவில் லாத

முடிவு :

துய்ய கனியுமென மதுரம் விளைந்தொழு பாடற்
கவிதை பொழிவது கயிலைக் கடவுள் வாழ்வே

காலம் :

இல்லை

குறிப்பு :

உதிரி ஏடுகள் 3 உள்ளன.

வரிசை எண் : 2514 சுவடி எண் : 1322-b

## அகத்தியர் சிவ குளிகை — 8

ஏடுகள் : 4 கி.எண்ணிக்கை : 100 அளவு : 24×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 514/D 1114 போன்றது.

—OO—

வரிசை எண் : 2515 சுவடி எண் : 1322-c

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 60 கி. எண்ணிக்கை : 500 அளவு : 24 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அலி மாட்டு மை

பொருளான பூரணமா யிருந்த சூட்சம்
புகலார்கள் நாதாக்கள் சொல்லக் கேளு
அருளான மாடாடு பெண்தா னப்பா
அலியாகப் பிறந்திருக்கும் சிகத்தி லப்பா
மருளாம லதினுடைய குளப்பு நாலும்
அவில்போலே அளவாய்ச் சீவி னாளி
வெருளாமல் கொம்பதிலே யுளக்குச் சீவி
மேலாக அவையுளக்கு கலந்திட் டேதான் — 1

முடிவு :

ரெண்டு ரூபாயிடை மொளகு
இரண்டு ரூபாயிடை யேலம்
இரண்டு ரூபாயிடை கடைமருந்தெல்லா
பாசுவாள் விட்டு அவ................

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பலவிதமான மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

* * *

வரிசை எண் : 2516 சுவடி எண் : 1323-a

## அகத்தியர் சிவ குளிகை — 8

ஏடுகள் 5 (2-6) கி. எண்ணிக்கை : 100 அளவு : 23½×3 செ.மீ.
பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 514 / D 1114, சுவடி எண் 1322-b போன்றது.

இதன் பின்னர் 'பெரும்பாட்டுக்கு மருந்து' எழுதிய 7 வது ஏடு உள்ளது.

வரிசை எண் : 2517 சுவடி எண் : 1323-b

## ஊழிக் காத்து

ஏடுகள் : 7 (8—14) கி. எண்ணிக்கை : 100 அளவு : 23½×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் ; அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 465-a / D 1030 போன்றது.

★ ★ ★

வரிசை எண் : 2518 சுவடி எண் ; 1323-c

## சுரத்துக்கு ஆறுமுக கிஷாயம்

ஏடுகள் : 1½ (15-16) கி. எண்ணிக்கை : 25 அளவு : 23½×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : சுப்பிரமணியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பாரப்பா கும்பமுனிக் குபதே சித்த
பரிவான ஆறுமுகக் கிஷாயஞ் சொல்வேன்
கூரப்பா சொல்லுகிறேன் கேளுகேளு
கெடிதான நிலவேம்பு பற்ப டாகம்

முடிவு :

சூடிய மணித்தக் காளி
தூதளை பிரமி கொன்றை
ஆடிய கழனி யோடு
அமுக்கிலாஞ் சூரி பாகல்
நாடிய எட்டுச் சாறு
நரிநெய்யில் வைத்து நக்க
தாடியும் பிள்ளையுண்டாம்
பிராய முத்தருகு மென்றே ! — 3

காலம் :

இல்லை

குறிப்பு :

சுரத்தினை உடன் போக்கக் கூடிய கிஷாயம் கூறப்பட்டுளது.

❋ ❋ ❋

வரிசை எண் : 2519

சுவடி எண் : 1323-d

## அகத்தியர் பாடல் — 5

ஏடுகள் : 2½(16-18) கி. எண்ணிக்கை : 100 அளவு : 23½ × 3 செ.மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆகமாய் தெட்சணா மூர்த்தி சொன்ன
அப்பனே முறிவுவகை என்ன வென்றால்
பாகமாய் நாவிபா ஷாணந்தான்
பாங்கான ஊமத்தை சேறாங் கொட்டை

**முடிவு :**

தேமப்பா நாவப்பழ முறிவ தாக
செப்புகிறேன் நெல்லிச்சார் கடுக்காய்த் தூளே
தாமப்பா குளிர்ந்த சலங்கு டிக்க
சாடியே போகுமடா அஞ்சு முற்றே !

சிவமயம்

தெண்டாயுத பாணி துணை

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது, எமது சுவடி எண் 236-i/D 401, எண் 267-c/D 479-ன் வேறாயது. இதில் தோஷ முறிவு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

இதன் பின்னர் பச்சைக் கற்பூர வைப்பு எழுதியுள்ளது 19-வது ஏடு.

★ ★ ★

வரிசை எண் : 2520 சுவடி எண் : 1323-e

## அகத்தியர் பாடல் — கெற்பக் கோள்

ஏடுகள் : 8(20-27) கி. எண்ணிக்கை : 200 அளவு : $23\frac{1}{2} \times 3$ செ மீ
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

**குறிப்பு :**

இது எமது சுவடி எண் 317-m/D 591 போன்றது.

—o—

வரிசை எண் : 2521 சுவடி எண் : 1323-f

## கொங்கணர் பாடல் கருக்குளிகை --8

ஏடுகள் : 5 (28 32) கி. எண்ணிக்கை : 200 அளவு : 23½ × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : கொங்கணர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

பாடுகிறேன் பார்வைக்கி அய்ங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு
நாடுகிறேன் சித்தருட பாதங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு

**முடிவு :**

சேறட்டா கருக்குளிகை சித்தர் தானுந்
திரமாக நூல்களிலே சொல்ல வில்லை
வாரடா எட்டுக்குள் கருக்குளிகை யாகத்தானும்
மைந்தனே அடக்கமே ஆச்சே முற்றே ! — 8

கொங்கணர் கருக்குளிகை எட்டு பாட்டு

முற்றும்

**களம் :**

இல்லை

**குறிப்பு :**

சகல வியாதி நீங்கவும், பில்லி சூனியம் அகலவும் இக்குளிகை பயன்படும் என்று கூறப்படுகிறது.

கடைசி ஏட்டின் பின்பக்கத்தில் ஷெ அட்டவணை எழுதப் பட்டுள்ளது.

இருமலுக்கு மருந்து எழுதிய ஒரு ஏடு இதன்பின் உளது.

✱ ✱ ✱

வரிசை எண் : 2512 சுவடி எண் : 1323-ӡ

# மச்சமுனியார் பாடல் — 8

ஏடுகள் : 5 (34-38) கி. எண்ணிக்கை : 200 அளவு : $23\frac{1}{2} \times 3$ செ.மீ.
பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : மச்சமுனியார் பொருள் : மருந்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

பூரணமாய் நின்றபரா சத்தி பாதம்
போற்றிசெய்தேன் தாயேஉன் பாதங் காப்பு
காரணமாய் மானிடர்கள் பிழைக்க வேண்டி
சதாசிவனை மனுகேட்டு மருந்து சொள்னோம்.

**முடிவு :**

மாளப்பா பெருநூலி லலைய வேண்டாம்
மைந்தனே சிறுநூலை புளிப்பாறு
வாளப்பா மானிடரே சுறுக்காய்ச் சொன்னேன்
வகைதுகையாய் மச்சமுனி பாடல் முற்றே! — 8

மச்சமுனியார் பாடல் எட்டு பாட்டு

எழுதி முகிந்தது

முற்றும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், உபதேசம், சாபநிவர்த்தி தீட்சை முதலியன கூறப்பட்டுள்ளன. கடைசி பக்கத்தில் குழந்தைக்கு கீரிப்பூச்சிக்கு மருந்து சொல்லப்பட்டுளது.

❋ ❋ ❋

வரிசை எண் : 2523 சுவடி எண் : 1323 b

## திருமூலர் பாடல் — 8

ஏடுகள் : 2 (38-39) கி. எண்ணிக்கை : 100 அளவு : 23½ × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

கிரந்திக்கு எண்ணெய்

தாதாவே நந்தி தயவா யுரைத்தமொழி
மாதாவே யென்தாயே மனோன்மணியே
ஆதார மான அறுமுகத்தோன் பாதம்
வேதாந்த பூரணமும் மெய்ப்பொருளுங் காப்பு — 1

**முடிவு :**

விணான வீணருக்குக் குடாதே யென்று
விருதாவாய்ப் போகுமென்று யென்குருதான் சொன்னார்
தானான மேகத்தில் பிறந்த ரோகம்
சதாகுருவின் யென்வாயிலே தீரு முற்றே !

திருமூலர் பாடல் எட்டுப் பாட்டு
கிரந்திக்கி யெண்ணை எழுதி முகிந்தது

முற்றும்

திருமூலர் முன்னிற்கவும்

குருவே துணை

சுவாமி லட்சிக்கவும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், கிரந்தி எண்ணெயும், தீரும் நோய்களும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2524 சுவடி எண் : 1323-i

# நந்தி பாடல் — 8

ஏடுகள் : 5 (40—44) கி. எண்ணிக்கை : 200 அளவு : 23½ × 3 செ. மீ
பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : நந்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமானது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

சீர்பெருகு மனோன்மணியென் மாதா வென்றுஞ்
சிவன்தானும் பிதாவென்று அவருட சீசனென்றுங்
கார்பெருகுந் திருமூலர் பிள்ளை யென்றுங்
கைலாச போகர்தான் தமைய னென்றும்

**முடிவு :**

வாச்சப்பா நெய்யிலே பொரித்துத் தானும்
மைந்தனே குளிகையது செய்து கொண்டு
நாச்சப்பா போகந்தம் பனந்தான் கட்டு
நலமான நந்தியுட பாடல் முற்றே !

நந்தி பாடல் எட்டுப் பாட்டு எழுதி முகிந்தது

முற்றும்

குரு பாதமே

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

விஷம் இறங்கக் குளிகை செய்முறை சொல்லப்பட்டுள்ளது.

இதன் பின்னர் மருத்துவம் எழுதிய ஏடுகள் 3 உள்ளன.

வரிசை எண் : 2525 சுவடி எண் : 1323-j

# சவுரியார் குழம்பு

ஏடுகள் : 10 (49-59) (50 வது ஏடு இல்லை) கி. எண்ணிக்கை : 200
அளவு : $23\frac{1}{2} \times 3$ செ.மீ. பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : சவுரியார்
பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை ; முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

**தொடக்கம் ;**

சறுவேஷ் பறனார் சகலமும் படைத்த
அறுமறை முனிவோர் யாவரும் பிழைக்க
குறுபரன் சீஷசற் குழம்பு சூரணத்தை
திறுவருள் என்றுஞ் சேவித்த பேர்க்கு
யிறுவினை நூத்தி எண்பது தீரும்.

**முடிவு :**

எல்லா விசமும் யினங்கண்டு செய்தால்
வல்லிருள் நீங்கு' வான்கதிர் போல
நல்லோர்............நாடிஆண் சொன்னேன்
வல்லோர் உணர்ந்து மகிழ்ந்த முற்றே.

குளம்பு முற்றும்

தெண்டாயுத பாணி லட்சிக்கவும்

குருவே துணை

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், நோய்க்கு மருந்தும், விஷங்களுக்கு மருந்தும் கூறப்பட்டுள்ளன.
இதன் பின்னர் 2 ஏடுகளில் ஒரு சீட்டுக்கவி உளது.

வரிசை எண் : 2526 சுவடி எண் : 1323-ஐ

# கும்ப முனி — 50 (16) சஞ்சீவி ரசாயனம்

ஏடுகள் : 9 (7 –78) கி. எண்ணிக்கை : 200 அளவு : 2 ½ × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

ஆதியென்ற குருநாத னருளிச் செய்த
றானபடி அண்டமெல்லாம் அடக்கிப் பாடி
சோதிவடி. வானவருள் கணபதியுங் கந்தன்
சொல்பெரிய நாதாக்கள் பாதம் போற்றி.

**முடிவு :**

வாமப்பா சதைவுடைப்பு நீர்செ ரித்து
வாங்காத கல்லடைப்பு நீர்க் கடுப்பு
போமப்பா நயத்தால் எழுந்த ரோகம்
ஓடுமடா மண்டலத்தில் உறுதி யாமே ! — 16

அகஸ்த்திமுனி முன்னிற்கவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு :**

இது, எமது சுவடி எண் 382-b/D 769 'கும்பமுனி பெருநூல் 50-ல் ரசாயனம்' என்பது போன்றது

தாது நட்டம், பாண்டு, சோகை முதலானதற்கு, மூலிகைகள் கடைச் சரக்குகள் சேர்ந்த மருந்து செய்முறை கூறப்பட்டுளது.

இதன் பின்னர் 1 பாடல் எழுதிய உதிரி ஏடு ஒன்று உளது.

வரிசை எண் : 2527 சுவடி எண் : 1323-1

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 37 (80-124) (சில ஏடுகள் இல்லை) கி. எண்ணிக்கை : 400
அளவு : $23\frac{1}{2} \times 3$ செ.மீ. பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் முதலானோர் பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சிரநோய், விழி நோய்களுக்கு மருந்து

நெல்லிவற்றல் பலம் — 4
செஞ்சந்தனக் கட்டை பலம் — 8
நல்ல சந்தனக்கட்டை பலம் — 4
மஞ்சள் பலம் — 2

முடிவு :

எலிக்கடிக்கு நசியம்

வாகைப்பட்டை விளயிலை
இது ரெண்டையும் காடியில்
பிசைந்து மூக்கில் நசியமிட
யனெட்டு எலிக்கடியும் தீரும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், செயநீர், துருசுச் சுன்னம், காது கேளாததற்கு, பிரிவுக்கு சக்கரம், வெட்டுக் காயம் குத்துக்காயங்களுக்கு, அகத்தியர் கருமான சூத்திரத்தில் சூனியம், கை கால் முடக்க அயச் செந்தூரம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 2528 சுவடி எண்; 1323-m

# அகத்தியர் கருமான சூத்திரம்

ஏடுகள் : 20 (125-144) கி. எண்ணிக்கை : 400 அளவு : 23½ × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 5—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பில்லி . வஞ்சினை, சூனியம் மீள

கருமான சாத்தாவின் கோவில் வைத்த
காரிய சூனியத்தின் குணமே தென்னில்
சுருபமது பூனைபோல நாய்போல
சுரம்பிடிக்கும் கண்குழியும் கண்பஞ்சாகும்

முடிவு :

கூட்டிய எண்ணை தானும்
குமுரவே வடித்துக் காச்சி
நாட்டமாய் சிரசில் தோய்த்து
செவியிலு நன்றாய் வாரு
மேட்டியா யிருந்தி டாதே
விட்டிட புகைதான் கேளு
நாட்டில்வாழ் பன்றி விட்டை
கருமயில் இறகு தானே ! — 60

தெண்டாயுதபாணி ரட்சிக்கவும்

தேவி சகாயம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், மாந்திரீகம், மருந்து முதலானதுகள் பேசப்படுகின்றன.

வரிசை எண் : 2529 சுவடி எண் 1323-n

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 26 கி. எண்ணிக்கை : 400 அளவு : $23\frac{1}{2} \times 3$ செ.மீ·
பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

**தின்னது தின்னது போலவே கழிச்சலுக்கு**

பட்டையே எட்ட தாகும்
பருத்த கெந்தக னால தாக
திட்டமாய் அவசுவ ரெண்டாம்
திகழ்கொடி வேலிரெண்ட தாக

முடிவு :

இஞ்சி சித்தமுட்டி பேராமுட்டி
சீந்திக்கொடி யெட்டு ஒன்றாக்கி
கசய குடுக்கவும். தாகம் தணியும்

காலம் :

இல்லை

குறிப்பு ;

இதில், நாட்கவிதை பாடல், நீர்க்கடுப்புக்கு, பிள்ளைபெற மாட்டாதற்கு எந்திரம், தந்த வியாதி முப்பத்திரண்டும் போகும் சேத்தும கட்டுக்கு குளிகை, கெற்ப விப்புருதிக்கு, வாழாமல் இருக்கிற ஆணுக்கு, பெண்ணுக்கு, கிங்கார சிங்கி மாத்திரை முதலான பல மருந்துகள் உள்ளன.

★ ★ ★ ★

வரிசை எண் : 2530

சுவடி எண் : 1324

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 60 கி. எண்ணிக்கை ; 600 அளவு : $27\frac{1}{2} \times 3$ செ.மீ.
பக்கத்திற்கு : 3—7 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

இரணங்களுக்கு ஆர்கோதாதி எண்ணெய்

ஆலம்பட்டை அரசன் பட்டை
அத்திப்பட்டை சிச்சி ..............
